# செய்யுள் - மலைபடுகடாம்

1.ஆற்றுப்படை என்றால் என்ன?

ஆற்றுப்படுத்தும் கூத்தன், வள்ளலை நாடி எதிர் வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம். நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக என்று கூறுதல் ஆற்றுப்படை.

2.மலைபடுகடாம் - நூல்குறிப்பு தருக.

- பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.
- அடிகள் - 583
- வேறு பெயர் - கூத்தராற்றுப்படை
- பெயர்க்காரணம் - மலையை யானையாக உருவகம் செய்து மலையில் எழும் ஓசைகளை அதன் மதம் என்று விளக்குவதால் இப்பெயர் பெற்றது.
- பாட்டுடைத் தலைவர் - நன்னன் என்னும் குறுநில மன்னன்.
- ஆசிரியர் - இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.

3. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது? (அல்லது)
மலைவாழ் மக்களின் விருந்தோம்பல் பண்பை மலைபடுகடாம் எவ்வாறு கூறுகிறது?(அல்லது)
மலைபடுகடாம் வழிநின்று பெருங்கௌசிகனார் கூறுவனவற்றை எழுதுக.

- ❖ நன்னனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்ற கூத்தர், பரிசில் பெறப்போகும் கூத்தரைக் கானவர்களின் வளம் நிறைந்த புதுவருவாயை உடைய சிறிய ஊர்களில் தங்கி உணவு பெறுவதற்கு வழிப்படுத்துதல்.
- ❖ பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள்.
- ❖ இரவில் சேர்ந்து தங்குங்கள்.

- எரியும் நெருப்பைப் போல ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து கொள்ளுங்கள்.
- பகலில் இளைப்பாறிச் செல்லுங்கள்.
- சிவந்த பூக்கள் கொண்ட அசோக மரங்களை உடைய பொருத்தமான பாதையில் செல்லுங்கள்.
- அசையும் மூங்கில்கள் ஓசை எழுப்பும் கடினப்பாதையில் சென்று மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.
- அங்குள்ளவர்களிடம், 'பகைவரைப் பொறாமல் போர் செய்யும் வலிய முயற்சியும் மானமும் வெற்றியும் உடைய நன்னனின் கூத்தர்கள்! என்று சொல்லுங்கள்.
- அதன் பிறகு நீங்கள் உங்கள் வீட்டிற்குள் போவதுபோலவே அவர்களுடைய வீட்டுக்குள் உரிமையுடன் நுழையுங்கள். உறவினர் போலவே அவர்கள் உங்களுடன் பழகுவர்.
- நீண்ட வழியைக் கடந்து வந்த உங்களின் துன்பம் தீர இனிய சொற்களைக் கூறுவர்.
- அங்கே, நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச்சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்.